DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.12/2024**
**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | மாணவர் |
| பெயர் | - | சரண் | வட்டம் | - | கிருஷ்ணகிரி |
| த/பெ | - | மாதேஷ்வரன் | சமயம் | - | |
| கிராமம் | - | பண்ணந்துூர் | வயது | - | 24/2024 |
| சாதி | - | | | | |

**26-12-2024**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 -ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கோயம்புத்தூர் கற்பகம் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு இளங்கலை படித்து வருகிறேன். அ.சா.1 ஜோதி என்பவரை தெரியும். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 06-05-2023-ம் தேதி நானும் சூர்யா, கார்த்தி, ரகு ஆகியோர் வால்பாறையை சுற்றிப்பார்ப்பதற்காக இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்தோம். சுற்றிப்பார்த்துவிட்டு திரும்பி செல்லும் வழியில் பகல் 02.00 மணியளவில் 29-வது கொண்டை ஊசி வளைவில் நானும், ரகுவும் ஒரு இரு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம் எங்களுக்கு பின்னால் சூரியாவும், கார்த்திக்கும் மற்றொரு இரு சக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டு திரும்பி பார்த்தபோது சூரியாவும், கார்த்திக்கும் கீழே விழுந்து கிடந்தார்கள். நாங்கள் திரும்பிவந்து கார்த்தியை பார்த்தபோது அவருக்கு வலது கால் அடிபட்டு இருந்தது அவருக்கு கிசிக்கைக்காக வாட்டர்பால் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்குஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தார்கள். கார்த்திக் மருததுவமனை செல்லும் வழியில் இறந்துவிட்டார். நானும் ஆம்புலன்ஸில் உடன் சென்றேன். இருசக்கர வாகனம் பிரேக் பிடிக்காமல் ஸ்கிட்டாகிவிட்டது. அதனால் விபத்து ஏற்பட்டது. இருசக்கரவாகனத்தை சூரியா ஓட்ட கார்த்திக் பின்னால் உட்கார்ந்து வந்தார். பொள்ளாச்சி சென்றபிறகு கார்த்திக் அம்மாவிற்கு தகவல் சொன்னேன். அவர்கள் புகார் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான், கார்த்திக், சூரியாமற்றும் ரகு நான்கு பேரும் எத்தனை மணிக்கு வால்பாறைக்கு வருவதற்கு கிழம்பினோம் என்றால் கோயம்புத்தூரில் இருந்து காலை 09.00 மணிக்கு கிளம்பினோம். நாங்கள் வால்பாறையை சுற்றிப்பார்த்துவிட்டு ஊருக்கு போகும் போது மழை பெய்ததா என்றால் ஆமாம். நான் இளகலை மூன்றாம் ஆண்டு படித்துவருகிறேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் சொல்லியுள்ளது

போலதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் சென்ற இரு சக்கர வாகனங்களும் மெதுவாக சென்றோமா என்றால் மெதுவாகத்தான் சென்றோம்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.12/2024**

**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | மாணவர் |
| பெயர் | - | ரகு | வட்டம் | - | கள்ளக்குறிச்சி |
| த/பெ | - | முருகன் | சமயம் | - | |
| கிராமம் | - | குதிரை சந்தல் | வயது | - | 22/2024 |
| சாதி | - | | | | |

**<u>26-12-2024</u>**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 -ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கோவை கற்பகம் மருத்துவ கல்லூரியில்லேப் டெக்னீசியன் படித்து பயிற்சியில் உள்ளேன். அ.சா.1 ஜோதி என்பவரை தெரியும். எதிரி சூரியாவை தெரியும். இறந்துபோன கார்த்திக்கை தெரியும். கடந்த 06-05-2023-ம் தேதி சனிக்கிழமை காலை கோவையிலிருந்து வால்பாறைக்கு இரண்டு இரு சக்கர வாகனங்களில் நானும், சரண், சூரியா, கார்த்திக் ஆகியோர் சுற்றிப்பார்க்கசென்றோம். அன்றைய தினம் வால்பாறையை சுற்றிப்பார்த்துவிட்டு பகல் 02-00 மணியளவில் கூழாங்கல் ஆறுபார்த்துவிட்டு அங்கிருந்து திரும்ப ஊருக்கு கிளம்பினோம். ஊருக்கு போகும் வழியில் பகல் 03.30 மணியிலிருந்து 03.45 மணியளவில் 30 மற்றும் 29 -வது கொண்டை ஊசி வளைவு இடைப்பட்ட துாரத்தில் கார்த்திக்கும், சூரியாவும் ஆளுக்குகொரு ஹெல்மெட் வைத்திருந்தார்கள். அப்போது மழை பெய்துகொண்டிருந்ததால் அவர்களிடம் இருந்து ஒரு ஹெல்மெட்டை நான் வாங்கிக்கொண்டேன். நானும், சரணும் முன்னால் சென்றோம். நான் ஹெல்மெட் வாங்குவதற்காக நிறுத்திய இடம் வரை சூரியா அவர் வந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். ஹெல்மெட் வாங்க நிறுத்திய இடத்தில் இருந்து கார்த்திக் ஓட்டி வர கேட்டான். சூரியா நானே ஓட்டி வருகிறேன் என்றார் இருவரும் பேசிக்கொண்டு இருந்த போதே இருவரில் யாராவது வாகனத்தை ஓட்டி வாங்க என்று சொல்லிவிட்டு நானும், சரணும் முன்னால் கிளம்பிவிட்டோம். சுமார் 100 அடி துாரத்தில் நாங்கள் முன்னால் சென்றுகொண்டிருந்தபோது நாங்கள் போன வளைவுக்கு பின்னால் இருந்த வளைவில் சத்தம் கேட்டதாக சரண் சொன்னார் நாங்கள் போய் பார்த்தோம். நாங்கள் போய் பார்த்தபோது இரு சக்கர வாகனம் பக்கவாட்டில் உரசிக்கொண்டே கீழே விழுந்துகிடந்தது. சூரியா எழுந்து வந்தார். அவருக்கு காயம் எதுவும் இல்லை. கார்த்திக் கீழே கிடந்தார். அவருக்கு வலது கால் எலும்பு முறிவு ஏற்பட்டுஇருந்தது. சிகிச்சைக்காக அந்தவழியில் வந்த காரில் வாட்டர்பால் அரசு

மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம் அங்கு கார்த்திக்கு ஆக்ஸிசன் வைத்து முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் பொள்ளாச்சி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். ஆம்புலன்சில் சரண் உடன் சென்றார். கார்த்திக்கும், சூரியாவும் வந்த இரு சக்கர வாகனத்தை போலீசில் ஒப்படைத்தோம். நாங்கள் வந்த இரு சக்கர வாகனத்தை நாங்கள் எடுத்துக்கொண்டு சென்றோம். கார்த்திக் போகும் வழியில் ஆம்புலன்சிலேயே இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். எனது மற்ற நண்பர்கள் மூலம் கார்த்திக் அம்மாவிற்கு தகவல் சொல்லி வரச்சொன்னோம். அவர் பொள்ளாச்சி மருத்துவமனைக்கு வந்தார். அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு தமிழ், ஆங்கிலம் மொழிகள் நன்றாக படிக்க எழுத தெரியும் என்றால் தெரியும். நான் தற்போது நீதிமன்றத்தில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் சொல்லிய வாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.12/2024**
**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | மாணவர் |
| பெயர் | - | விஸ்வா | வட்டம் | - | லால்குடி |
| த/பெ | - | நந்தகுமார் | சமயம் | - | |
| கிராமம் | - | வாளாடி, திருச்சி | வயது | - | 21/2024 |
| சாதி | - | | | | |

**26-12-2024**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 -ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கோவை என்.ஜி.பாராமெடிக்கல் கல்லூரியில் கார்டியாக் டெக்னீசியர் படித்து முடித்து பயிற்சியில் இருந்து வருகிறேன். அ.சா.1 ஜோதி என்பவரை தெரியும். அவர் கார்த்தியின் அம்மா ஆவார். சூரியா என்பவரை தெரியும். கடந்த 06-05-2023-ம் தேதி மதியம் 03.30 மணியளவில் நான் கல்லூரி விடுதியில் இருந்தபோது கார்த்தியின் நண்பர் ரகு என்பவர் எனக்குபோன் செய்து கார்த்தியும், சூரியாவும் அப்பாச்சி என்ற இரு சக்கர வாகனத்தில் வால்பாறையிலிருந்து வந்துகொண்டிருந்த போது 29-வது கொண்டை ஊசி வளைவில் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், அப்போது எதிரே வந்த யுனோவா காரில் கார்த்தி விழுந்து அடிபட்டுவிட்டதாக தெரிவித்தார். அடிபட்ட கார்த்தியை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தெரிவித்தார். நாங்கள் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது கார்த்தி இறந்துவிட்டார். கார்த்தியின் வலது முழுங்காலில் அடிபட்டு இருந்தது. கார்த்தியின் வீட்டிற்கு தெரிவிக்கப்பட்டு அவர் அம்மா பொள்ளாச்சி மருத்துவமனைக்கு வந்தார். கார்த்தியின் அம்மா புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

தற்போது நீதிமன்றத்தில் சொல்லியவிவரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :**இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.12/2024**

**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | விஜயன் | வட்டம் | - | புதுக்கோட்டை |
| த/பெ | - | ரமேஷ் | சமயம் | - | |
| கிராமம் | - | நைனான்கொல்லை | வயது | - | 22/2024 |
| சாதி | - | | | | |

**26-12-2024**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 -ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் குடியிருந்து பெங்களூர் தனியார் மருத்துவனையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஜோதி என்பவரை தெரியும். அவர் கார்த்தியின் அம்மா ஆவார். சூரியா என்பவரை தெரியும். சூரியா கார்த்திக் உடன் விடுதியில் ஒன்றாக தங்கி இருந்தார். கடந்த 06-05-2023-ம் தேதி மதியம் 03.30 மணியளவில் நான் என்ஜி பாரா மெடிக்கல் கல்லூரி விடுதியில் இருந்தபோது கார்த்தியின் நண்பர் ரகு என்பவர் எனக்குபோன் செய்து கார்த்தியும், சூரியாவும் அப்பாச்சி என்ற இரு சக்கர வாகனத்தில் வால்பாறையிலிருந்து வந்துகொண்டிருந்த போது 29-வது கொண்டை ஊசி வளைவில் மழை வந்துகொண்டிருந்ததால் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், அப்போது எதிரே வந்த யுனோவா காரில் கார்த்தி விழுந்து அடிபட்டுவிட்டதாக தெரிவித்தார். அடிபட்ட கார்த்தியை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தெரிவித்தார். நானும் விஸ்வாவும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது கார்த்தி இறந்துவிட்டார். அவரது உடலை மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருந்தார்கள். கார்த்தியின் வலது முழுங்காலில் அடிபட்டு இருந்தது. வெளியில் காயம் எதுவும் தெரியவில்லை. கார்த்தியின் வீட்டிற்கு தெரிவிக்கப்பட்டு அவர் அம்மா பொள்ளாச்சி மருத்துவமனைக்கு வந்தார். கார்த்தியின் அம்மா புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

தற்போது நீதிமன்றத்தில் சொல்லியவிவரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :**இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.